முருகப்பெருமான் துணை

**மகான் மச்சமுனிவர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**11.08.2023**, வெள்ளிக்கிழமை

1. தருமபலம் பேருலகு அடைய
தனிப்பெருங் கருணை காட்டி
ஆறுமுகனார் அவதாரம் கொண்டு
அறம் வளர்க்கின்ற ஞானியே
2. ஞானியே ஆறுமுக அரங்கனே
ஞாலமதில் உன் பெருமை கூறி
இனிமைபட அறிவுரை ஆசியை
இயம்பிடுவேன் சோபகிருது நள்ளி திங்கள்
3. திங்களிலே இருபானாற்திகதி புகர்வாரம்
(சோபகிருது வருடம் ஆடி மாதம் 26 ம் நாள், 11.08.2023, வெள்ளிக்கிழமை)
தெரியவே மச்சமுனிவர் யானும்
ஓங்கார உலகம் அமைய உரைப்பேன்
ஓங்கார குடில் படைத்து அருளும்
4. அருளும் அரங்கன் ஞானபலம்
அறியாத பூமி எல்லாம்
இருளாம் அழிவினில் மாட்டி
இல்லாது போக நேருமப்பா
5. அப்பனே ஆறுமுகப் பெருமான்
அவதாரம் நிகழ்த்தி இருக்க
ஒப்புகொண்டு அரங்கன் தருமம்
ஓங்காரம்பட ஏற்ற நாடுகள்
6. நாடுகள் பாதுகாப்பை காணும்
நாசவேலைகள் பேரழிவுகளான
இடர்களை எல்லாம் கடந்து
இலகுவாய் நல்வழி மீட்பு காணும்

7. காணவே மதஇன பேதமென
கட்டுண்டு தீவழி நடக்கின்ற
ஞானமிலா தேசம் அனைத்தும்
நச்சுக்கிருமி வழி அழிந்தது போல்
8. அழிந்ததுபோல் இன்னும் வருமுலகில்
அணு ஆயுதபோர் முறையோடு
அழிந்திடும் இயற்கை தாக்குதலிலும்
அன்னதனால் மச்சமுனி யானும்
9. யானும் தருகின்ற எச்சரிக்கை இது
உயிர்கொலை நீக்கி தயவுபட
ஞானதேசிகன் அவதாரம் மேல்
நம்பிக்கை வைத்து எந்ததேசம்
10. தேசமெலலாம் சன்மார்க்க வழி
தேற்றும் ஒரே வழியென ஏற்று
நேசக்கரம்பட அணைத்துமே
நிலவுலகில் தருமம் வளர்க்கின்றதோ
11. வளர்க்கின்ற பூமி எல்லாம்
வாழும் வள்ளல் தன்மைபட
வளர்ச்சிப் பாதுகாப்புதனை பெறும்
வடிவேலன் ஆசிபட ஞானபூமியாகும்
அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–